C.C.No. 256/2019
நாள்: 20.05.2025

அ.சா. 1 – சித்ரா ஆஜர். (சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

1. நாங்கள் சென்ற வண்டியில் ஏரியூருக்கு வேலைக்கு செல்வதற்காக சென்றோம். நாங்கள் சென்ற வாகனத்தை போலவே மற்றொரு பொலிரோ வாகனத்தில் வேலைக்காக ஆட்களை மாதையன் என்பவர் ஓட்டிவந்தார் என்றால் சரிதான். அவரை மாயன் என்று அழைப்பார்கள். நானும், என்னுடன் பயணம் செய்தவர்களும் பொலிரோ வாகனத்தின் பின்புறமாக ஏற்றப்பட்ட கலவை கலக்கும் இயந்திரத்தின் பக்கவாட்டில் நின்றவாறு பயணம் செய்தோம் என்றால் சரிதான். நான் பின்னால் பயணம் செய்ததால் வாகனத்திற்கு முன்னதாக என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மாதையன் ஓட்டிவந்த வாகனம் எங்களுக்கு முன்னதாக சென்றதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. மாதையன் அவர் எங்களுக்கு முன்னால் ஓட்டிச்சென்ற வாகனத்தை எந்தவித சமிக்கையும் செய்யாமல் சாலையின் வலதுபுறமுள்ள பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்புறதற்காக திடீரென திருப்பியதால் அந்த வாகனத்தின் மீது மோதுவதை தவிர்க்க திரும்பியபோது மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் மாதையன் எங்களுக்கு முன்னால் சென்றாரா என்று எனக்கு தெரியாது. நாங்கள் சென்ற வாகனம் கவிழ்ந்தது மட்டும் தெரியும். மாதையன் ஓட்டிச்சென்ற வாகனம் பெட்ரோல் போடுவதற்காக திருப்பியதாக சொன்னார்கள். மாதையனின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பின்னால் இருந்ததால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். 1 ம் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

C.C.No. 256/2019
நாள்: 20.05.2025

அ.சா.2 – உண்ணாமலை ஆஜர். (சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

1. நாங்கள் சென்ற வண்டியில் ஏரியூருக்கு வேலைக்கு செல்வதற்காக சென்றோம். நாங்கள் சென்ற வாகனத்தை போலவே மற்றொரு பொலிரோ வாகனத்தில் வேலைக்காக ஆட்களை மாதையன் (எ) மாயன் என்பவர் கூட்டிவந்தார் என்றால் சரிதான். அவரை மாயன் என்று அழைப்பார்கள். நானும், என்னுடன் பயணம் செய்தவர்களும் பொலிரோ வாகனத்தின் பின்புறமாக ஏற்றப்பட்ட கலவை கலக்கும் இயந்திரத்தின் பக்கவாட்டில் நின்றவாறு பயணம் செய்தோம் என்றால் சரிதான். நான் பின்னால் பயணம் செய்ததால் வாகனத்திற்கு முன்னதாக என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டுனர் வேகமாக ஓட்டிவந்தார். மாதையன் (எ) மாயன் ஓட்டிவந்த வாகனம் எங்களுக்கு முன்னதாக சென்றதா என்றால் சரிதான். பெட்ரோல் போடுவதற்காக எங்களுக்கு முன்னதாக சென்று நின்றது.

2. மாதையன் (எ) மாயன் அவர் எங்களுக்கு முன்னால் ஓட்டிச்சென்ற வாகனத்தை எந்தவித சமிக்கையும் செய்யாமல் சாலையின் வலதுபுறமுள்ள பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்புறதற்காக திடீரென திருப்பியதால் அந்த வாகனத்தின் மீது மோதுவதை தவிர்க்க திரும்பியபோது மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற வாகனம் கவிழ்ந்தது மட்டும் தெரியும். மாதையன் (எ) மாயன் ஓட்டிச்சென்ற வாகனம் பெட்ரோல் போடுவதற்காக திருப்பியதாக சொன்னார்கள். மாதையனின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பின்னால் இருந்ததால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். 1 ம் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

C.C.No. 256/2019
நாள்: 20.05.2025

அ.சா.4 – நடுப்பிள்ளை ஆஜர். (சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

1. நாங்கள் சென்ற வண்டியில் ஏரியூருக்கு வேலைக்கு செல்வதற்காக சென்றோம். நாங்கள் சென்ற வாகனத்தை போலவே மற்றொரு பொலிரோ வாகனத்தில் வேலைக்காக ஆட்களை மாதையன் (எ) மாயன் என்பவர் கூட்டிவந்தார் என்றால் சரிதான். அவரை மாயன் என்று அழைப்பார்கள். நானும், என்னுடன் பயணம் செய்தவர்களும் பொலிரோ வாகனத்தின் பின்புறமாக ஏற்றப்பட்ட கலவை கலக்கும் இயந்திரத்தின் பக்கவாட்டில் நின்றவாறு பயணம் செய்தோம் என்றால் சரிதான். நான் பின்னால் பயணம் செய்ததால் வாகனத்திற்கு முன்னதாக என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டுனர் வேகமாக ஓட்டிவந்தார். மாதையன் (எ) மாயன் ஓட்டிவந்த வாகனம் எங்களுக்கு முன்னதாக சென்றதா என்றால் அந்த வாகனம் எங்களுக்கு முன்னதாக சென்று பெட்ரோல் போடுவதற்காக நின்றுக்கொண்டிருந்தது. பெட்ரோல் பங்கில் மாதையன் ஓட்டிவந்த வாகனம் நின்றுக்கொண்டிருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், சம்பவத்தன்று மாதையன் ஓட்டிச்சென்ற வாகனம் எங்களுக்கு முன்னதாக சென்றுக்கொண்டிருந்தது என்றால் சரியல்ல.

2. மாதையன் (எ) மாயன் அவர் எங்களுக்கு முன்னால் ஓட்டிச்சென்ற வாகனத்தை எந்தவித சமிக்கையும் செய்யாமல் சாலையின் வலதுபுறமுள்ள பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்புறதற்காக திடீரென திருப்பியதால் அந்த வாகனத்தின் மீது மோதுவதை தவிர்க்க திரும்பியபோது மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற வாகனம் கவிழ்ந்தது மட்டும் தெரியும். மாதையன் (எ) மாயன் ஓட்டிச்சென்ற வாகனம் பெட்ரோல் போடுவதற்காக திருப்பியதாக சொன்னார்கள். மாதையனின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பின்னால் இருந்ததால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். 1 ம் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.